**செய்தி வெளியீடு எண்: 067** **நாள்: 25.01.2019**

## சுற்றுலா பொருட்காட்சியில் கலை பண்பாட்டுத்துறை சார்பில்

## தமிழக பாரம்பரிய கிராமிய கலை நிகழ்ச்சிகள்

சென்னை தீவுத்திடலில் நடைபெறும் 45வது சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் எடப்பாடி திரு. கே.பழனிச்சாமி அவர்கள் ஜனவரி 9 அன்று தொடங்கி வைத்தார். இவ்விழாவில் கலை பண்பாட்டுத் துறை சார்பில் தமிழகத்தின் பல பகுதிகளை சேர்ந்த 102 கலைஞர்கள் இணைந்து கிராமியகலை அமுதம் எனும் நிகழ்ச்சியினை வழங்கினார்கள்.

தமிழகத்தின் அரிய பழமையான கலை வடிவங்களை அனைத்து தரப்பினரும் அறிந்துக் கொள்ளும் வகையில் கலை பண்பாட்டுத் துறைசார்பில் அரசு பொருட்காட்சியின் அண்ணா கலையரங்கில் தமிழர் திருநாளான பொங்கலை முன்னிட்டு விடுமுறை தினங்களில் பல்வேறு கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. பொங்கல் தினத்தன்று சென்னை திரு. கஜேந்திரன் குழுவினரின் பொய்க்கால் குதிரையாட்டம், விருதுநகர் திரு. வேலு குழுவினரின் பறையாட்டம், வேலூர் திரு. முனுசாமி குழுவினரின் தெருக்கூத்து ஆகிய நிகழ்ச்சிகளும் மாட்டுப் பொங்கல் தினத்தன்று திருவண்ணாமலை பாப்பம்பாடி திரு. முனுசாமி குழுவினரின் பெரியமேளம் கிருஷ்ணகிரி திரு. குருமூர்த்தி குழுவினரின் சேவையாட்டம் நிகழ்ச்சிகளும் காணும் பொங்கல் அன்று மதுரை திரு. ஜெயக்குமார் குழுவினரின் சாட்டைக்குச்சியாட்டம், வேலூர் திரு. அசோகன் குழுவினரின் கோலாட்டம், திருப்பூர் மின்னல் கலைக்குழுவினரின் தப்பாட்டம், ஈரோடு திரு. சேகர் குழுவினரின் கடவு மத்தாட்டம், ஆகிய கிராமியக் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. அதனை தொடர்ந்து வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய நாட்களில் மாலை 5 மணி முதல் 7 மணி வரை தமிழகத்தின் தனிச்சிறப்பு வாய்ந்த கிராமிய கலை நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

ஜனவரி 18 விழுப்புரம் திரு. சத்தியராஜ் குழுவினரின் புராணநாடகம், கடலூர் திரு. மணிவேல் குழுவினரின் காளையாட்டம் ஆகியவையும், ஜனவரி 19 அன்று தூத்துக்குடி முனைவர் சங்கர் குழுவினரின் ஓயிலாட்டம், திருநெல்வேலி திரு. முத்துபெருமாள் குழுவினரின் கட்டைக்கால் ஆட்டம், கன்னியாகுமரி திரு. முத்துசந்திரன் குழுவினரின் தோல்பாவைக்கூத்து ஆகியவையும் ஜனவரி 20 அன்று சேலம் திரு. சக்திவேல் குழுவினரின் பம்பையாட்டம், நாமக்கல் திரு. பிரகாசம் குழுவினரின் கரகாட்டம், தருமபுரி இராமகிருஷ்ணன் குழுவினரின் தெருக்கூத்து கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

இந்நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து வரும் ஜனவரி 25 வெள்ளிக்கிழமை நாகப்பட்டினம் மாவட்டம் திரு. ஜே.கிங் பைசல் குழுவினரின் காளியாட்டம், சிவகங்கை திரு. கருப்பையா குழுவினரின் நையாண்டிமேளம், திருச்சிராப்பள்ளி திருமதி. ஜெயா குழுவினரின் லாவணி நிகழ்ச்சி ஆகியவையும், ஜனவரி 26 அன்று மதியம் 3 மணி முதல் அரியலூர் திரு. ஜான் குழுவினரின் கிராமிய கலை நிகழ்ச்சிகள், திண்டுக்கல் திரு. மாரி முத்து குழுவினரின் கோல்கால் ஆட்டம் இராமநாதபுரம் திரு. நாகன் குழுவினரின் ஜிம்பளா மேளம், கரூர் திரு. சண்முகம் குழுவினரின் மயிலாட்டம், கோயம்புத்தூர் திரு. செல்வராஜ் குழுவினரின் பிருந்தாவனக்கும்மி ஆகியவையும் ஜனவரி 27 அன்று தேனி திரு. முத்துலட்சுமண ராவ்

குழுவினரின் தோல்பாவைக் கூத்து, திருவாரூர் திரு. ஹர்கிஷன் சுர்ஜித் குழுவினரின் காவடியாட்டம், திருவள்ளூர் திரு. ந.பன்னீர் செல்வம் குழுவினரின் கிராமிய பாட்டு நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளன.

தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலுள்ள கலைஞர்களுக்கும் வாய்ப்பளிக்கும் வண்ணம் நடத்தப்படுகின்ற இந்த கலை நிகழ்ச்சிகளை பொதுமக்கள், கலை ஆர்வலர்கள் கண்டு களித்து கலைஞர்களுக்கு ஊக்கம் அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**